**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 65/2022**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 22.09.2023**

| | |
|---|---|
| **Name : பிரசாந்த்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1 present. ) (Accused 2 – 5 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்பொழுது மேட்டூர் அரசு மருத்துவமனை முதுநிலை உதவி மருத்துவராக உள்ளேன். கடந்த 21.02.2021 ம் தேதி மாலை 06.15 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.கோவிந்தராஜ் வயது 47, த/பெ காளியப்பன் என்பவரை அவருடைய சகோதரர் முத்து என்பவர் சிசிச்சைக்கா அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 21.02.2021 –ம் தேதி மாலை 04.30 மணிளவில் மூன்று அடையாளம் தெரிந்த ஆண் மற்றும் பெண் நபர்கள் இரும்பு ராடு, கல் , கத்தி, ஆகியவற்றை வைத்து நிலத்தில் வைத்து தாக்கியதாக என்னிடம் கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) 4 cm நீளமான வெட்டுக்காயம் இடது கையில் இருந்தது. 2) 1* 1 செ.மீ கன்னிய காயம் இடது கையின் மோதிர விரலில் காணப்பட்டது. 3) 1*1 செ.மீ கண்ணிய காயம் இடது கையின் நடுவிரலில் காணப்பட்டது. அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளி பிரிவில் 5 நாட்கள் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் கடந்த 21.02.2021– முதல் 25.02.2021 வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். 2 வது காயம் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது.

3) மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்களில் 2 வது காயம் கொடுங்காயம் எனவும்,

1, 3 காயங்கள் சாதாரண காயங்கள் என எலும்பு முறிவு மருத்துவர் அவர்களிடம் கருத்துரை பெற்ற பின்னார் சான்றளிக்கப்பட்டது. **மேற்படி விபத்து பதிவேடு கூடிய காயச்சான்று அ.சா.ஆ.3.** போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

4) சிகிச்சைக்காக வந்தவர் நடந்து தான் வந்தார் என்றால் சரிதான். மருத்துவமனையில் சேர்த்த அன்றையதினமே காவல் துறைக்கு அறிவிப்பு கொடுககப்பட்டதாக விபத்து பதிவேட்டில் உள்ளது என்றால் சரிதான். 2, 3 காயங்கள் வீக்கம் மட்டும் தான் என்றால் சரிதான். அது ரத்த காயம் இல்லை. நுண் கதிர் படம் எடுத்து சிகிச்சை அளிக்கப்பட்டதா என்றால் ஆமாம். அந்த நுண்கதிர் படம் போலிசாரிடம் விசாரணையின் போது ஒப்படைக்கப்பட்டதா என்றால் இல்லை.

5) நுண்கதிர் படம் எடுத்த விவரத்தை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த நுண்கதிர் படம் ஏன் கொடுக்கவில்லலை என்றால் அது டிஜிட்டல் வடிவத்தில் எடுக்கப்பட்டதால் கொடுக்கவிலலை. அதன் நகல் எடுக்கலாமா என்றால் எடுக்கலாம். நகலை பெற வில்லை என்றால் சரிதான். கொடுங்காயம் என்பதால் ஆதாரம் கொடுக்கவேண்டியது எனது கடமை என்றால் போலிசார் கேட்டால் கொடுப்போம்.

6) 1வது காயம் வெட்டுக்காயம் என்றால் சரிதான். இரும்பு போன்ற முள் பகுதி படும போது இது போன்ற காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மற்ற காயங்கள் கீழே விழும் போது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் விழும் தன்மையை பொறுத்தது. என்னிடம் கொடுத்த புகாரில் 6 நபர்கள் தாக்கியதாக சொன்னார்கள் என்றால் சரிதான். மூன்று காயங்களும் 5 நாட்கள் சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இல்லை என்றால் எலும்பு முறிவு உள்ளதால் சிகிச்சை எடுக்கவேண்டியுள்ளது.

7) எலும்பு முறிவுக்கு 10 –15 நாட்கள் சிகிச்சை பெற வேண்டும் என்றால் காயத்தின் தன்மையை பொருத்தது. நான் கருத்துரை மட்டுமே பெற்றேன் என்றால் சரிதான். நான் எலுமபு முறிவு சிகிச்சை நிபுணர் இல்லை என்றால்

சரிதான். நான் எவ்வாறு கருத்துரை எழுதினேன் என்றால் மருத்துவ பதிவேட்டை பார்தது எழுதினேன். மருத்துவ பதிவேடு சம்மந்தமான நகல் போலிசார் பெற்று விசாரித்தார்களா என்றால் இல்லை. ஒருவர் வேண்டுமென்றே கீழே விழுந்து அதற்காக சிகிச்சை பெற என்னிடம் வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/-தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**